**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – மேல்நிலைக் கல்வி – 100 தொழிற்கல்வி ஆசிரியர் (விவசாயம்) தற்காலிக பணியிடங்கள் – 01.01.2015 முதல் 31.12.2015 வரை தொடர் நீட்டிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வி (ப.க2(2)த் துறை**

அரசாணை (1டி) எண். 56

நாள்: 23.02.2015
திருவள்ளுவராண்டு 2046
மாசி மாதம் 11ஆம் நாள்.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.129, பள்ளிக் கல்வித் துறை, நாள் 18.05.1999.
2. அரசாணை(1டி)எண்.32, பள்ளிக் கல்வித் (ப.க2(2) துறை, நாள் 13.02.2014.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.79756/எல்/இ3/ 2014, நாள் – 04.12.2014.

-------

**ஆணை:**

மேலே 1ல் படிக்கப்பட்ட அரசாணையில் 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் புதிதாக விவசாய தொழிற்கல்வி பாடம் அறிமுகப்படுத்தப்பட்டு 100 தொழிற்கல்வி ஆசிரியர்(விவசாயம்) பணியிடங்கள் 5500–175–9000 என்ற ஊதிய விகிதத்தில் தற்காலிகமாக தோற்றுவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் 100 தொழிற்கல்வி ஆசிரியர்(விவசாயம்) தற்காலிக பணியிடங்களுக்கு மேலே 2ல் படிக்கப்பட்ட அரசாணையில் திருத்திய ஊதிய விகிதத்தில் ரூ.9300–34800 தரஊதியம் 4600 என்ற ஊதிய விகிதத்தில் 31.12.2014 வரை தொடர் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தொடர் நீட்டிப்பு காலம் 31.12.2014 உடன் நிறைவு பெற்றுள்ளது என்றும், மேற்குறிப்பிட்ட 100 தொழிற் கல்வி ஆசிரியர்(விவசாயம்) பணியிடத்திற்கு 31.12.2014 உடன் தொடர் நீட்டிப்பு நிறைவுற்ற நிலையில் 01.01.2015 முதல் மேலும் 5 ஆண்டுகள் தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

2. மேற்காணும் சூழ்நிலையில், பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, அரசாணை (நிலை) எண்.129, பள்ளிக்கல்வித் துறை, நாள் 18.05.1999–ன்படி தோற்றுவிக்கப்பட்ட 100 தொழிற்கல்வி ஆசிரியர்(விவசாயம்) தற்காலிக பணியிடங்களுக்கு வழங்கப்பட்ட தொடர் நீட்டிப்பு 31.12.2014 அன்றுடன் முடிவடைந்த நிலையில், 01.01.2015 முதல் 31.12.2015 வரை ஓராண்டிற்கு அல்லது தற்காலிக பணியிடங்களின் தேவை குறித்து நிதித்துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அது வரை தொடர் நீட்டிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேற்குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2202–பொதுக்கல்வி–02–இடைநிலைக் கல்வி –109–அரசு இடைநிலைப் பள்ளிகள் –I திட்டத்தில் சேராதது–AA-அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் 01–சம்பளங்கள்.”
(த.தொ.கு 2202–02–109–AA–0108)

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.904/Edn-II/2015, நாள்–18.02.2015ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பள கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பள கணக்கு அலுவலர்,
சென்னை மாநகராட்சி, சென்னை–3.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–15.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், சென்னை–35.

<u>நகல்</u>
நிதிக் (கல்வி II)துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி நகல்.
அ.ந.மு. பிரிவு, சென்னை–9.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

26/02/2015
அரசு சார்புச் செயலாளர்.